முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1621

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.03.2024,** வியாழக்கிழமை

1. அருட்கடலே அன்னதான வள்ளலே
   ஆறுமுக அரங்கமகா தேசிகனே
   பொருள்பற்று நீக்கி உலகோர் புண்ணியவழி வர
   பிரணவக்குடில் படைத்து அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 24 ம் நாள், 07.03.2024, வியாழக்கிழமை)
   வரமென அரங்கன் வழி உலகோர்க்கு
   வடிவேலன் யான் ஞானபலம் தந்து வருகின்றேன்
3. தர்மகுணத்தை படைத்து உலகோரெல்லாம்
   தர்மவான்களாக தன் கர்மவினைபோக்கி
   இனிதே கலியுகத்தில் தனிப்பெரும் சக்தியாக
   தன்னார்வ தொண்டர்களாகப் பெருக
4. ஆறுமுகன் யான் ஆற்றல்பட இயக்கி வருகின்றேன்
   அன்னதனால் அரங்கன் தொடர்பு கொண்டால் போதும்
   அரங்கன் தொண்டர்களென உள்ளவர்களோடு
   இசைவு கொண்டால் போதும்
5. வருகின்ற மக்களுக்கெல்லாம் வல்லமைபட ஞானம் பெருகி
   வடிவேலன் என் வழிபாட்டுக்கு வருகின்ற வாய்ப்பும்
   என்னை வணங்கி வரும் காலங்களில்
   பிறவாப்பேறு அடைகின்ற சித்தியும்
6. பிசகின்றி அரங்கன் வழி
   ஞானத்தால் அடையக் கூடும்
   கூடவே அன்னதனால் கலியுகத்தார்
   குரு அரங்கனை நாடி

7. குருவே என வணங்கி தீட்சை ஏற்று
திருவருள் வேண்டி நின்றால் போதும்
தொடருகின்ற மக்களுக்கெல்லாம்
குருவருள் மூலம் ஆறுமுகன் யான் திருவருளாக இறங்கி

8. ஆற்றல்பட அழியாமை தந்து இனிதே
அகிலத்தில் ஞானவான்களை ஞானிகளை
ஞானசித்தர் காலமதையும் உருவாக்கி அற்புதம் நிகழ்த்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–